
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜூலை 23, 2022 — Weekly E-paper ● July 23, 2022



## நினைவில் கொள்வோம் தீதும், நன்றும் பிறர்தர வாரா!

காசு. நாகராசன்

**பேரறிஞர் அண்ணாவின் தீர்மானம் ‘தமிழ்நாடு’ நாள்!**

சாரதாதேவி

**குடியரசுத் தலைவருக்கு முதல்வர் வாழ்த்து!**

தலையங்கம்

**அறுபதாவது ஆண்டில் ஆசிரியர்...!**

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜூலை 23, 2022 Weekly E-paper ● July 23, 2022


# நினைவில் கொள்வோம் தீதும், நன்றும் பிறர்தர வாரா!

**காசு. நாகராசன்**

கல்விக்கு முக்கியத்துவம் தருகிற மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. அதிலும் குறிப்பாகப் பெண் கல்விக்குக் கடந்த 30 ஆண்டுகளில் வழங்கப்பட்ட முக்கியத்துவம் அளப்பரியது, பாராட்டுக்குரியது.

பெண்கள் மற்றும் விளிம்புநிலை மக்களின் கல்வி வேலை, வாய்ப்புகள் அகில இந்திய சராசரியை விடவும் கூடுதலாகவே தமிழ்நாட்டில் இருந்து வருவதும், அனைவருக்குமான வளர்ச்சியை மையப்படுத்திக் கடந்த நூறு ஆண்டுகளாகத் தமிழ்நாட்டின் சமூக அரசியல் நகர்த்தப்படுவதும் இங்கே முக்கியமாகக் கவனிக்கத் தக்கதாகும்.

இந்தியத் துணைக்கண்ட அரசியல் என்பதே திராவிட - ஆரிய அரசியல்தான். ஏகலைவனின் கட்டைவிரலாகட்டும், சம்பூகனின் தலையாகட்டும் இன்றளவும் ஆரிய திராவிடப் போரின் சாட்சிகளே அன்றி வேறில்லை.

புராண காலத்தில்தான் என்றில்லை இன்றும் இதே நிலைதான். அனிதாக்களும் ஸ்ரீமதிகளும் நிகழ்கால சாட்சியங்கள். கல்வியைப் பிடுங்கிவிட்டால் போதும் பிறகு அந்தக் கூட்டத்தையே அடிமைப்படுத்தி விடலாம் என்கிற சூழ்ச்சித் திட்டத்தைத்தான் ஆரியக்கும்பல் இன்றளவும் செயல்படுத்தி வருகிறது.

1938 இல் இராஜகோபால ஆச்சாரி இந்தியைத் திணித்ததும், 1953இல் அதே இராஜாஜி குலக்கல்வியைக் கொண்டுவர முனைந்ததும், முன்னதாக 1950இல் நீதிமன்றம் வழியாக இட ஒதுக்கீட்டைப் பறிக்க முயற்சித்ததும், 1965 இந்தித் திணிப்பும், 1980இல் இட ஒதுக்கீட்டில் வருமான உச்சவரம்பு என்றதும், 1990-இல் மண்டல் எதிர்ப்புப் போராட்டங்களும், நுழைவுத் தேர்வுகளும், 2014 மோடி காலத்தில் தொடங்கிய நீட்தேர்வும், புதிய கல்விக் கொள்கையும் எல்லாம் நமது கல்வி உரிமையைப் பறிக்கிற ஆரிய சூழ்ச்சிகள்தான்!

1968ஆம் ஆண்டு நாம் மேற்கொண்ட இரு மொழிக் கொள்கையும், 1928 முதல் மேற்கொண்டு வருகிற இடஒதுக்கீடு கொள்கையும், நமது கல்வியைப் பாதுகாத்து வருகிறது என்பதை உணராத ஒரு தலைமுறை, இப்போது வளர்ந்து உயர்ந்திருக்கிறது.

அந்தத் தலைமுறையின் வாரிசுகள்தான் இப்போது கல்வி கற்கிற இடத்திற்கு வந்துள்ளார்கள். வரலாறு தெரியாத இந்தத் தலைமுறைக்கு அறிவியலும் தெரியவில்லை, உளவியலும் புரியவில்லை. ஆரியத்தின் சூழ்ச்சியில் சிக்கியபடி தங்கள் குழந்தைக்கான கல்வி நிலையங்களைத் தேடுவதிலும், கல்வியைத் தீர்மானிப்பதிலுமே மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறது.

குழந்தைக் கல்வியை அருகமைப் பள்ளிகளில்தான் கற்பிக்க வேண்டும் என்கிற அடிப்படையைக் கூட உணராமல், மிகச்சாதாரணமாக விடியற்காலை ஆறு மணிக்கே டிபன் பாக்ஸ் புத்தக மூட்டையோடு சேர்த்து குழந்தைகளைப் பள்ளிப் பேருந்தில் திணித்து அனுப்புவதை ஒரு “ஃபேசனா”கவே கருதத் தொடங்கிவிட்டது, இன்றைய தலைமுறைப் பெற்றோர் சமூகம்.

பள்ளியைப் பற்றிய கவலை இல்லை. படிப்பை பற்றிய கவலை இல்லை. வெறும் பெருமை பற்றி மட்டுமே இவர்கள் கவலைப்படுகிறார்கள்.




இன்றைக்கு அரசோ, தனியாரோ தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் பத்துகிலோ மீட்டர் சுற்றளவில் பத்துப்பள்ளிகள் இருக்கின்றன. அதில் இரண்டு பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகள்.

ஆனாலும் நூறு, இருநூறு கிலோ மீட்டர் தள்ளி இருக்கிற பள்ளியை நோக்கி ஓடுகிறோம். சரி அதைக்கூட ஏதேனும் ஒரு காரணத்தில் சமாதானம் செய்து கொண்டாலும் கூட குழந்தைகளிடம் பெற்றோர் மனம்விட்டுப் பேச வேண்டாமா? பள்ளி - கல்வி - ஆசிரியர் - மாணவர்கள் - விடுதி - காப்பாளர் - உணவு இப்படி அனைத்தையும் குழந்தையோடு இயல்பாகப் பேசி குழந்தையின் உண்மை நிலை என்ன என்பதை தெரிந்து கொள்ளவேண்டியது பெற்றோராகிய நமது பொறுப்பில்லையா?

அதேபோல பள்ளிக்கூடம் நடத்துகிறவர் யார்? அவரது பின்னணி என்ன? பள்ளியின் சரி, தவறுகள் பற்றிய கருத்துகள் என்று அக்கம் - பக்கம், முன்னாள் மாணவர்கள், பெற்றோர்கள் என விசாரிக்க வேண்டாமா? இவைகளை நாம் பொறுப்பாகக் கருதுவதில்லை என்றால் பெற்றோர்களின், மாணவர்கள் மீதான நிலைப்பாடு, கவனம்தான் என்ன?

குழந்தையின் வகுப்பாசிரியரிடமும், சக மாணவர்களிடமும் மாதம் ஒருமுறையாவது நேரடி தொடர்பு கொண்டு பேச வேண்டாமா? பள்ளியில் சேர்ப்பதோடு சரி, சேர்க்கும்போது பணத்தை மட்டும் கடனை, உடனை வாங்கிக் கட்டி விட்டு வேறு வேலையைப் பார்ப்பது என்பது நமது பொறுப்பையும் கடமையையும் நாம் தட்டிக்கழிக்கிறோம் என்றுதானே பொருள்!

நமது கடமையை நாம் தவறிவிடுகிறபோது இதுபோல நேர்ந்துவிடுகிற தவறுகளின் வலியைச் சுமந்து இனி காலமெல்லாம் அழுது தீர்க்கிறோம்.

கள்ளக்குறிச்சி ஸ்ரீமதியின் கடைசி நிமிடங்கள் எப்படி இருந்திருக்குமோ...

என்கிற பதைபதைப்பு. அதே வயதுடைய குழந்தையின் தந்தையாக எனக்குள் இன்னமும் இருக்கிறது. அந்தக் குழந்தையின் மரணத்தின் பின்னணியைக் கண்டறியப்பட வேண்டும். தவறிழைத்த அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். இனியொரு ஸ்ரீமதி இப்படியொரு துயரத்திற்கு ஆட்படக்கூடாது என்கிற ஆதங்கத்தோடு சில செய்திகளைப் பேசியாக வேண்டியுள்ளது.


ஸ்ரீமதியின் சந்தேக மரணத்தைத் தொடர்ந்து பள்ளியில் நடைபெற்ற போராட்டம் வன்முறையாக வெடித்திருக்கிறது. இதற்கு யாரெல்லாம்

தொடர்ச்சி அடுத்த பக்கம்

# பேரறிஞர் அண்ணாவின் தீர்மானம் ‘தமிழ்நாடு’ நாள்!

சாரதாதேவி

2019 முதல் நவம்பர் 1இல் கொண்டாடப்பட்ட தமிழ்நாடு நாளை, முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள், இந்த ஆண்டு முதல், ஜூலை 18 ஆக மாற்றி அமைத்தார். ஆம், மொழி வழி மாநிலங்கள் உருவான நவம்பர் 1, 1956 இல் நம் நாடு சென்னை மாகாணமாகத்தான் இருந்தது. 1953 முதல் தமிழ்நாடு என்று பெயர் வைக்க பல்வேறு தமிழ் அறிஞர்களும் கோரிக்கைகள் வைத்துக்கொண்டு தான் இருந்தனர். அப்போதைய ஆளும் காங்கிரசு கட்சியினருக்கும் அந்த அவா நெஞ்சிலே இருந்தாலும், போதுமான உறுதி இன்றி அது தள்ளிப் போடப்பட்டு வந்தது.



ஆந்திரா, கேரளா, கருநாடகா உள்ளிட்ட பிறமொழி மாநிலங்கள் பிரிந்த நிலையில், மொழி வாரி மாநிலங்கள் பிரகடனப்படுத்தப் படும் முன்பே, 1956 ஜூலை 27ஆம் நாள் தமிழ்நாடு பெயர் மாற்றத்துக்காகப் பட்டினிப் போராட்டம் தொடங்கினார், அந்நாள் காங்கிரசுக்காரரான சங்கரலிங்கனார். 73 நாள்கள் போராட்டம் தொடர்ந்த நிலையில், அவர் கம்யூனிஸ்ட் கட்சியிடமும், தி.மு.கழகத்திடமும் தன் கோரிக்கையை நிறைவேற்ற நம்பிக்கை வைத்தார். தன் உயிர் பிரிந்தாலும் தன் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்ற பெருநம்பிக்கையோடு அத்தமிழ்மகன் அக்டோபர் 13, 1956 அன்று தன் உயிரை ஈகம் செய்தார். தாய்க்குப் பெயரிட மகன் தன் இன்னுயிர் கொடுத்த வீரஞ்செறிந்த நிகழ்வு அது! ஆனாலும் நிறைவேறவில்லை அவருடைய விருப்பம்.

1957இல் முதன் முதலில் தேர்தலில் பங்கேற்ற தி.மு.க, மாநிலத்தின் பெயர் மாற்றத்தையும் வாக்குறுதியாக வைத்தது. ஆனாலும் அதன் பின், 1962இல் கூடுதல் இடங்களைப் பிடித்தும் தி.மு.க. விற்கு, ஆட்சி கையில் இல்லாமல் போனது. 1967இல் பெரும்பான்மை இடங்கள் பெற்று ஆட்சி அமைத்தது தி.மு.க. ஆட்சி அமைத்த நான்கு மாதங்களில், சங்கரலிங்கனார் தன் போராட்டத்தைத் தொடங்கிய அதே ஜூலை மாதம், அவர் போராட்டத்தைத் தொடங்கிய நாளுக்கு முன்பாகவே, ஜூலை 18 அன்று, நம் மாநிலத்திற்கு “தமிழ்நாடு” எனப் பெயர் முழங்கி, தீர்மானம் கொண்டு வந்தார் தி.மு.கழகத்தின் முதல் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா! அவருடைய உணர்ச்சிமிகு தீர்மானம் தமிழரின் உணர்வுகளை அள்ளிக் கொண்டு சென்றது. எதிர்க்கட்சியினரோ, சுயேச்சையோ, எவர் ஒருவரின் எதிர்ப்புமின்றி, ஒருமித்த குரலில் அனைத்து உறுப்பினர்களும் “வாழ்க” என முழக்கமிட, “தமிழ்நாடு” எனும் பெயர் சூட்டும் தீர்மானம் நிறைவேறியது.

இன்று சிலர், தி.மு.க. அறிவித்த “தமிழ்நாடு நாள்” தீர்மானம் போட்ட நாள்தான் என்றும், வேறு சிலர் மாநிலம் உருவான நவம்பர் 1தான் சரியானது என்றும் பேசுவதைக் கேட்க முடிகிறது. தமிழ், தமிழர், தமிழ் மண் என்றால் தாங்கள்தான் நினைவுக்கு வரவேண்டும் என்ற ஆதிக்கக் கண்ணோட்டத்தில் இருந்து வரும் பொருமல்கள் அவை!

தமிழ், தமிழர், தமிழ் மண், தமிழர் உரிமைகள் என்றால் திராவிடம் நினைவுக்கு வரும்! திராவிட மாடல் நினைவுக்கு வரும்! பேரறிஞர் அண்ணா அவர்கள், ஆட்சிக்குக் காத்திருந்து, தலை மேல் கொண்டு நிறைவேற்றிய கொள்கைத் தீர்மானம் அது! அன்று தொடங்கி ஆசியாவின் வளர்ச்சிமிகு பகுதியாக நம் மாநிலத்தைக் காத்தும் நிர்வகித்தும் வரும் திராவிடம், தமிழ்நாடு எனப் பெயர் வைத்த பெருமைக்கு நிச்சயம் தகுதி உடையதே!

முதலமைச்சர் சொல்படியே, “I don’t care” என்று சொல்லி, விமர்சனம் செய்பவர்களையும் அவர்களுடைய சுயவிளம்பர விமர்சனங்களையும் இடக்கையால் புறந்தள்ளி, மக்களோடு இருப்போம். மக்கள் நம்மோடு இருப்பார்கள் என்று “தமிழ்நாடு நாளில் “ முழக்கமிடுவோம் !

---

முன்பக்கத் தொடர்ச்சி

காரணம்? முதல் காரணம் பள்ளி நிர்வாகம். படிப்பதற்காக சேர்க்கப்பட்ட குழந்தையின் உயிரைக்காப்பாற்ற முடியாத பள்ளி நிர்வாகம், குழந்தையை இழந்து தவிக்கிற பெற்றோருக்கு ஆறுதல்கூட சொல்லாமல் பதுங்கிக் கொண்டிருந்ததே போராட்டம் வெடிக்கக் காரணமானது.

ஒரு கோட்டை அழிக்காமல் சிறிதாக்க பக்கத்தில் ஒரு பெரிய கோடு போடவேண்டும் என்கிற சூட்சமம் போல, ஸ்ரீமதியின் மரணத்தைவிட பள்ளியில் நடைபெற்ற வன்முறை முதன்மையான பேசு பொருளாக்கப் பட்டிருக்கிறது. இது ஒரு திட்டமிட்ட வன்முறை என்கிற அய்யம் இங்கேதான் எழுகிறது.

தமிழ்நாடு எவ்வளவோ பெரிய போராட்டங்களைச் சந்தித்திருக்கிறது. எதிலேயும் கொள்ளை நடந்ததில்லை. ஆனால், கள்ளக்குறிச்சிப் போராட்டம் தமிழ்நாட்டு வடிவமாகத் தெரியவில்லை. அது ஏறக்குறைய வடநாட்டுக் கலாச்சாரத்தையே பிரதிபலிக்கிறது. இதன் ஆபத்தை நாம் உணர்ந்து கொள்ளவில்லையேல் தமிழ்நாட்டின் எதிர்கால நலன் கேள்விக்குறியாவது தவிர்க்க முடியாது.

அதேபோலத் திராவிட மாடல் ஆட்சிக்கு ஏற்ற அரசு அதிகாரிகள் இல்லை. அவர்கள் எல்லாம் கிட்டத்தட்ட ஆரியமாடல் விரும்பிகளாகவே இருக்கிறார்கள் என்பதை முதல்வர் அவர்கள் கவனத்தில் கொள்வது அவசர அவசியத் தேவையாகும்.

ஆசிரியப் பணிசெய்கிற பெருந்தகைகளுக்கு ஒரு பணிவான வேண்டுகோள்... நீங்கள் படித்தவர்கள். பண்பு நிறைந்தவர்களாக, பகுத்தறிவாளர்களாக, நேர்மையாளர்களாக இருக்கவேண்டும். குறைந்த பட்சம் மனிதர்களாகவாவது நடந்துகொள்ள முயற்சியுங்கள். இல்லையேல் எதிர்காலச் சமூகம் உங்களுக்கும் சேர்த்தே பெரிய குழியை வெட்டிவைக்கும் என்பதை உணருங்கள்.

இனியும் ஸ்ரீமதிகள், தங்கள் எதிர்கால லட்சியங்களையும், கனவுகளையும் யாரோ ஒரு மூன்றாம் நபரின் தவறுகளால் புதைத்து விடக்கூடாது. பெருங்கவலையோடும் இழப்பின் வலியுணர்கிற துயரத்தோடும் இந்த வேதனையைப் பகிர்ந்து கொள்கிறோம்.

சம்பந்தப்பட்ட பள்ளி குறித்து தீவிரப் புலன்விசாரணையை அரசு மேற்கொள்ள வேண்டும். உண்மைகளை வெளிக்கொணர வேண்டும் என்பதே ஸ்ரீமதிக்கான நியாயம். அதைத் திராவிட மாடல் அரசு நிச்சயம் செய்யவேண்டும் !

தீதும் நன்றும் பிறர் தர வாரா! நினைவில் கொள்வோம்!!

# அறுபதாவது ஆண்டில் ஆசிரியர்...!

**வெற்றிச்செல்வன்**



குடிஅரசு, திராவிடன், புரட்சி, பகுத்தறிவு, விடுதலை, உண்மை, ரிவோல்ட், தி மாடர்ன் ரேஷனலிஸ்ட் உள்ளிட்ட ஒன்பது இதழ்களை நடத்தியவர் தந்தை பெரியார். அனைத்தும் தமிழருக்காக...! தமிழரின் சமூக விடுதலைக்காக...! தமிழர் சமூகநீதி பெறுவதற்காக...! தமிழர் முன்னேற்றத்திற்காக....!

மக்களைச் சென்றடைவதற்கான கருவியாக, பத்திரிக்கைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தவர் பெரியார். இப்போது உள்ளதைப் போல, காட்சி ஊடகங்கள் இல்லாத அந்த நாட்களில் பத்திரிக்கைகளே மக்களுக்குச் செய்திகளை எடுத்துச் செல்வதாக இருந்தன.

"நம் நாட்டில் தமிழர்களில் எத்தனையோ யோக்கியர்கள், விவேகிகள், கெட்டிக்காரர்கள் இருந்தாலும் அவர்கள் பொது ஜனங்களுக்குத் தெரியக் கூடாதவராய் இருக்கிறார்கள். இதன் காரணம் தமிழர்களுக்குச் செல்வாக்கும் சக்தியுமுள்ள பத்திரிக்கையில்லை.

மகாத்மா காந்திக்கே தமிழ்நாட்டில் தமிழர் யோக்கியதை தெரிய வேண்டுமானால் ஒரு பிராமணனைக் கொண்டோ ஒரு பிராமணப் பத்திரிக்கையைக் கொண்டோதான் தெரிந்து கொள்ள வேண்டும்..... தமிழர்களின் யோக்கியதை தமிழ்நாட்டினருக்குத் தெரியவேண்டுமானால் பிராமணப் பத்திரிக்கையின் மூலமாகத்தான் அறிய வேண்டியிருக்கிறது. இதைவிடத் தமிழர்களுக்கு வேறு இழிவு வேண்டியதே இல்லை" என்று சுட்டிக்காட்டுகிறார் பெரியார்.

*"100-க்கு 90-க்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள கூட்டத்தாருக்குத்* தங்கள் நாட்டில், தங்களைப் பற்றி, தங்கள் சமூகத்தாரே அறிந்து கொள்ள ஒரு சாதனம் இல்லை என்றால் இதைப் பற்றி என்ன நினைப்பது?" என்று கேட்கிறார் (குடிஅரசு, 02.08.1925).

இந்த எண்ணமே பெரியாரை ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்களைத் தொடங்கத் தூண்டியிருக்கிறது எனலாம்.

விடுதலை இதழைத் தந்தை பெரியார் தொடங்கிய ஆண்டு 1935. தொடக்கத்தில் வாரம் இருமுறையாக வெளிவந்த இதழ், 1937ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை நாளிதழாக வெளிவந்துகொண்டிருக்கிறது. அடக்குமுறைகள் பல கண்டபோதிலும், ஆதிக்கத்தினை எதிர்த்து அனுதினமும் போராடும் விடுதலை, நூற்றாண்டை நெருங்கும் நூல் அறுக்கும் தாள்...!


விடுதலை இதழானது இதுவரை எட்டு ஆசிரியர்களைக் கண்டுள்ளது. டி. ஏ. வி. நாதன், பண்டிதர் எஸ். முத்துசாமி, அ. பொன்னம்பலனார், சாமி சிதம்பரனார், பேரறிஞர் அண்ணா, அன்னை மணியம்மையார், ஆசிரியர் கி. வீரமணி. இதில் ஆசிரியர் அவர்களே நீண்ட காலம் விடுதலை இதழின் ஆசிரியராகப் பணியாற்றும் பெருமை கொண்டவர்.

இந்தியாவில் 60 ஆண்டுகாலம் ஓர் இதழுக்கு ஆசிரியராக இருக்கும் ஒருவர், நமது தமிழர் தலைவர் ஆசிரியர் அவர்களே. 'இந்து' ஆங்கில நாளிதழின் ஆசிரியர் பொறுப்பில் கோபாலன் அவர்கள், 26 ஆண்டுகள் பணிபுரிந்தவர் ஆவார். ஆனால் விடுதலை இதழுக்கும், இந்து நாளிதழுக்கும் அடிப்படையிலேயே வேறுபாடுகள் உள்ளன.

'இந்து' இதழ் வெகுமக்களுக்கான ஊடகம். 'விடுதலையோ' வெகுமக்களின் நம்பிக்கைக்கு எதிரான கருத்துகளை வெளியிடும் ஊடகம். வெகுமக்களின் நம்பிக்கையைக் கேள்வி கேட்கும் ஊடகம். இந்து எவரிடமும் விளம்பரங்களைப் பெற்று வெளியிடும் வணிக ஊடகம். விடுதலை அவ்வாறு விளம்பரங்களைப் பெறாத சமூகப் பண்பாட்டு ஊடகம். இந்த அடிப்படையைப் புரிந்து கொண்டால், விடுதலை இதழை நடத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களைப் புரிந்து கொள்ளலாம்.. இந்து இதழைப் போல் விடுதலை இதழ் இயங்காது. விடுதலை இதழைப் போல் எந்த இதழும் இயங்க இயலாது.

திராவிடர் கழகம் சிறப்பாகச் செயல்பட வேண்டுமானால் கொள்கைப் பிரச்சாரமும், இதழும் அவசியம் என்று கருதியவர் பெரியார். அவர் விரும்பியது கழகத் தொண்டிற்காக முழுநேரம் தங்களை ஒப்படைக்கக்கூடிய தோழர்கள். இப்பணிக்காக அவர் வேண்டுகோள் விடுத்தது, இருவரிடம். ஒருவர் ஆனைமலை நரசிம்மன்; மற்றொருவர் நமது ஆசிரியர் அவர்கள்.

இதில் தோழர் நரசிம்மன் அவர்களால், குடும்பச் சூழ்நிலை காரணமாக சில காலத்திற்குப்பின் தொடர்ந்து முழுநேரத் தொண்டு செய்ய இயலாமல் போனது. அந்த நேரத்தில் நமது ஆசிரியர் அவர்கள், பெரியார் உட்பட பல தோழர்களின் வேண்டுகோளுக்கும், விருப்பத்திற்கும் இணங்க, முழுநேரத் தொண்டராய் இருக்கத் துணிந்து ஒப்புக் கொண்டு, குடும்பத்துடன் சென்னைக்கே வந்துவிட்டார்.



வரவேற்கிறேன்

என் உடல் நிலை எனக்கு திருப்தி அளிக்கத்தக்கதாய் இல்லை. இப்போது போல் சுற்றுப்பிரயாணம் செய்ய என்னால் இனி முடியாது. கழகம் நல்லபடி இயங்கவேண்டுமானால் பிரசாரமும் பத்திரிகையும் மிக்க அவசியமாகும். இந்த இரண்டு காரியத்திற்கும் தகுதியான தன்மையில் தான் நான் இருந்து வந்தேன்.

எப்படி என்றால் நான் ஒருவன்தான் இடைவிடாது முழு நேரத் தொண்டனாகவும், கழகத்தில் ஊதியம் எதிர்பார்த்து வாழ்க்கை நடத்த வேண்டிய அவசியமில்லாதவனாகவும் இருந்து வந்தேன்; வருகிறேன். இன்று கழகத்தின் மூலம் ஊதியம் எதிர்பார்த்து வாழ்க்கை நடத்த வேண்டிய அவசியமில்லாத தோழர்கள் கழகத்தில் ஏராளமான பேர் இருந்து நல்ல தொண்டு ஆற்றி வருகிறார்கள்.

ஆனால் கழகத்தொண்டுக்கு முழு நேரம் ஒப்படைக்கக் கூடிய தோழர்கள் இல்லை. பிரசாரத்திற்கும் அப்படிப்பட்ட தோழர் இதுவரை கிடைக்கவில்லை. பத்திரிகைக்கும் அப்படிப்பட்ட தோழர் கிடைக்கவில்லை.

இப்படிப்பட்ட நிலையில் கழக விஷயமாய் நான் நீண்ட காலமாகப் பெருங்கவலைப்பட்டுக் கொண்டு இருந்தேன். இதற்கென்றே இருதோழரை வேண்டினேன். அவர்களில் ஒருவர் தோழர் ஆனைமலை நரசிம்மன் பி. ஏ. ஆவார்கள், மற்றொருவர் தோழர் கடலூர் வீரமணி எம். ஏ. பி. எல்., அவர்கள். இதில் தோழர் நரசிம்மன் அவர்கள் எனது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு தனது எஸ்டேட்டை மக்களுக்கு ஒதுக்கி கொடுத்துவிட்டு, வீட்டை விட்டே வந்து விட்டார். அதனாலேயே அவரை கழக மத்திய கமிட்டிக்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கலாம் என்று கருதி, முதலில் கழகப்பொதுச் செயலாள

தொடர்ச்சி அடுத்த பக்கம்

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## குடியரசுத் தலைவருக்கு முதல்வர் வாழ்த்து!

இந்திய ஒன்றியத்தின் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்க இருக்கிறார் திரௌபதி முர்மு அவர்கள்.

அண்டை நாடான இலங்கையில் ரணில் விக்ரமசிங்கே அதிபராகி விட்டார். ஏறத்தாழ இருவரும் ஏககாலத்தில் நாட்டின் தலைமைப் பொறுப்புகளை ஏற்கிறார்கள்.

ராஜபக்சே சகோதரர்களால் இலங்கை சின்னாபின்னமாக ஆக்கப்பட்டுவிட்டது.

ஈழத்தின் மீது நடத்தப்பட்ட போர், ஐ.எம்.எப் இடம் வாங்கிய அத்துமீறிய கடன், தாமரைத் தூண் கட்டிய மக்களின் வரிப்பணம், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 ஆண்டுகளுக்கு சீனாவிடம் கொடுத்து விட்டு வாங்கிய பில்லியன் கணக்கான கடன், அளவுக்கு மீறி அச்சடிக்கப்பட்ட ருபாய் நோட்டுகள், பண மதிப்பிழப்பு, உணவுக்கும் – எரிபொருளுக்கும் அலைந்து கொண்டிருக்கும் மக்கள், அரசை எதிர்த்து மக்களின் போராட்டம் இப்படிப்பட்ட சூழலில் இலங்கையின் அதிபராக ஆகியிருக்கிறார் ரணில்.

இந்திய ஒன்றியத்தின் உதவியைத் தவிர வேறு எந்த உதவியும் கிடைக்காத நிலையில், உதவி செய்ய உலக நாடுகள் தயங்கும் நிலையில் பொறுப்பேற்றுள்ளார் ரணில் விக்ரமசிங்கே. என்ன செய்யப் போகிறார், அவர்?

இந்திய ஒன்றியத்தின் மோடி அரசு, அரசின் சொத்துக்களான வங்கிகள், எல்.ஐ.சி, ஏர்இந்தியா, தபால் தந்தித்துறை, நிலக்கரிச் சுரங்கங்கள், இரயில்வே என்று ஒவ்வொன்றாகத் தனியார் மயப்படுத்தி வருகிறது. இது பெரிய அளவில் வேலையில்லாத் திண்டாட்டத்தை உருவாக்கக் கூடும்.

போதாக்குறைக்கு ஏழை நடுத்தர மக்களைப் பாதிக்கும் அளவுக்குப் பால், அரிசி, வெண்ணெய், இறைச்சி, பள்ளிக் குழந்தைகளுக்கான பென்சில், ரப்பர், நோட்டுகள் என்று ஜி.எஸ்.டி. வரிகளைத் திணித்துக் கொண்டு இருக்கிறது. அமெரிக்க டாலருக்கு எதிராக இந்திய ருபாயின் மதிப்பு ஏறத்தாழ 80 என்று சரிந்து பணவீக்கத்தைக் காட்டுகிறது.

முக்கியமாக ஒன்றிய அரசுக்கும், மாநிலங்களின் அரசுகளுக்குமான முரண்பட்ட நிலைகள், அதில் ஒன்றியம் காட்டும் ஆதிக்கம்....

இப்படிப்பட்ட நிலையில் திரௌபதி முர்மு குடியரசுத் தலைவர் ஆகிறார். நாட்டின் எதிர்காலம் சிறப்படைய வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பு.

பழங்குடிச் சமூகத்தில் இருந்து, குறிப்பாக ஒரு பெண் குடியரசுத் தலைவராகிறார் என்பது மகிழ்ச்சியே.

ஆனால் அந்த மகிழ்ச்சி மட்டும் போதாது. பழங்குடி மக்களின் கல்வி உள்ளிட்ட அவர்களின் வாழ்க்கையும் உயர வேண்டும். இதுவும் சமூக நீதியில் அடங்கும்.

இதோ வாழ்த்து தெரிவிக்கிறார் நம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 'இந்தியாவின் மிக உயர்ந்த அரசியலமைப்புப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரௌபதி முர்முவுக்கு மனமார்ந்த வாழ்த்துகள். சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவில் இருந்து வந்துள்ள நீங்கள், அரசியலமைப்புசார் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த, உரிமைகள் மறுக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாகத் துணை நிற்பீர்கள் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்' !

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com


டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408

முன்பக்கத் தொடர்ச்சி

இதனை, திராவிடர் கழகத்திற்குக் கிடைக்க முடியாத ஒரு பெரும் நல்வாய்ப்பு என்று கருதுவதாகக் கூறி ஆசிரியர் அவர்களை 'வரவேற்கிறேன்' என்று தலையங்கம் எழுதி வரவேற்கிறார் தந்தை பெரியார் (விடுதலை, 12.08.1962).


மனைவி, குழந்தை குட்டி இல்லாத வாலிபப்பருவத்தில் பொதுத் தொண்டு உற்சாகம் பலருக்கு ஏற்படுவது இயற்கை. ஆனால் மனைவி, குழந்தை, குடும்பப் பொறுப்பு, நல்ல எதிர்காலம், தொழில் ஆதரவு ஆகிய இவை உள்ள நிலையிலும், நாளைக்கும் அவர் (வீரமணி) ஒப்புக் கொள்வதானால் (M. A, B L., என்பதனாலும் பரீட்சையில் உயர்ந்த மார்க்கு வாங்கி இருக்கும் தகுதியாலும்) மாதம் 1க்கு ரூ 250க்கு குறையாத சம்பளமுள்ள அரசாங்க அல்லது ஆசிரிய பதவி அவருக்கு காத்திருந்து ஆசை காட்டிக் கொண்டிருக்கும் போதும், அவைகளைப் பற்றிய கவலையில்லாமல் முழுநேரப் பொதுத் தொண்டில் இறங்குவதென்றால் இது இயற்கையில் எப்படிப்பட்ட மனிதரிடமும் எளிதில் எதிர்பார்க்கமுடியாத விஷயமாகும்.

குடும்பப் பொறுப்பு, நல்ல எதிர்காலம், தொழில், ஆதரவு, அதிக ஊதியம் ஆகியவற்றைப் புறந்தள்ளிவிட்டு, அவைகளைப் பற்றிய கவலை இல்லாமல் முழுநேரப் பொதுத் தொண்டில் இறங்குவதென்றால், அது யாரிடமும் எளிதில் எதிர்பார்க்க முடியாதது என்று ஆசிரியர் அவர்களைப் பாராட்டும் பெரியார், ஆசிரியர் மட்டும் இப்பணிக்கு இசையாமல் இருந்திருந்தால், தினசரி 'விடுதலையை' நிறுத்தி, வாரப் பத்திரிகையாகக் கொண்டு வர முடிவு செய்திருந்ததாகவும் குறிப்பிடுகிறார்.

இதனை விடுதலை இதழின் வெள்ளி விழா ஆண்டிலும் நினைவு கூர்ந்து, தோழர் வீரமணியின் சேவை என்று கூறிப் பாராட்டுகிறார் பெரியார். ஆசிரியரின் துணிவையும், தியாகத்தையும், சுயநலமற்ற தன்மையையும் போற்றிப் பாராட்டும் பெரியார், அத்தகைய பண்புநலன்களைக் கொண்ட ஆசிரியர் அவர்களிடம் 'விடுதலை' இதழ் ஒப்படைக்கப்படுகிறது என்று பெருமிதத்தோடு கூறுகிறார் (விடுதலை, 06.06.1964).

அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட 'விடுதலை' 88 வது ஆண்டில் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது.

*"எத்துணை எழுச்சி; எத்துணை உயர்ச்சி!*
*எத்துணை விரிந்த எண்ணக் குவியல்!*
*சடசட சடவெனச் சொற்கள் ஆட்சி!*
*மடமட மடவெனும் கருத்து மாமழை!"*

என்ற புரட்சிக்கவிஞரின் பாடலைப் போல, தமிழர்தம் இல்லந்தோறும், உள்ளந்தோறும் சுயமரியாதைச் சுடர் ஏற்றி, பகுத்தறிவுக் கனல் மூட்டும் விடுதலை வாழ்க! ஆசிரியர்தம் அறப் பணி நீடூழி வாழ்க!

●